**Tamil**

## அவுட்டர்நெட்டில் லண்டனின் பண்பாட்டு இழைகள்

அவுட்டர்நெட்டில் நீங்கள் பார்ப்பதும் கேட்பதும் உங்களைப் போன்ற சக லண்டன்வாசிகளின் நிஜ அனுபவங்களாகும்.

ஒவ்வொரு பேருந்து, டியூப், டிராம், ஓவர்கிரவுண்டு, DLR இரயிலில் காணப்படும் பிரபலமான இருக்கை வடிவத்தின் பிரத்தியேக அனிமேட்டட் பதிப்பைப் பயன்படுத்தி அவர்களின் அனுபவங்களுக்கு நாங்கள் உயிர்கொடுக்கிறோம்.

TfL வழியாக பிணைப்பின் இந்தத் தருணங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம், உலகிற் சிறந்த நகரத்தின் பண்பாட்டு இழையின் ஒரு பகுதியை நாம் அனைவரும் உணர முடியும்.

அவர்களின் கதைகளை அறிந்துகொள்ளுங்கள், TfL fabric of London #LondonForEveryone என்பதைத் தேடிப் பாருங்கள்

'எனது வெள்ளையின பள்ளி நண்பர்கள் இனவெறியைச் சகித்துக் கொள்வதில்லை.

பேருந்தில் பயணம் செய்து எனது அம்மா சமைக்கும் ஜமைக்கா மாட்டுவால் சூப்பைச் சாப்பிடுவதற்காக எனது வீட்டிற்கு வருவது அவர்களுக்குப் பிடித்த ஒன்று.'

ஐரீன்

'கேம்டன் டியூபில் பயணிக்கும் சிலர் தமது குயர் அடையாளத்தைத் துணிச்சலுடன் வெளிக்காட்டும் வகையில் முடியை வித்தியாசமாக வெட்டி இருந்தனர்.

நானும் எனது தலைமுடியைச் சிறியதாக வெட்டிக்கொண்டேன், எனது வாழ்வில் முதல்முறையாகக் கவர்ச்சியாக உணர்ந்தேன்.'

கெல்லி

'நான் DLRஇல் கிரீன்விச்சிற்குப் பயணித்து, ஒவ்வொரு பின்னணியும் திறமையும் கொண்ட 53,000 மாரத்தான் வீரர்களுடன் இணைந்துகொண்டேன்.

ஒவ்வொருவரும் தத்தமது தனிப்பட்ட பயணத்தில் உள்ளனர்.'

ஜேமி
‘நான் ஹேக்னியில் வெஸ்ட் ரிசர்வயரில் உள்ள எனது நீச்சல் கிளப்பிற்குச் சைக்கிளில் செல்வேன். நமது சமூகம் ஒரு பாதுகாப்பான புகலிடமாக உள்ளது, பல்வேறு பின்னணிகளில் இருந்து வந்த தாய்மார்கள் ஒருவொருக்கொருவர் ஆதரவாக இருந்து தண்ணீருக்குள்ளேயும் வெளியேயும் வலிமையாக உணரச் செய்கின்றனர்.

பிரிட்ஜெட்
‘நாங்கள் மிகவும் வேறுபட்ட கலாச்சாரப் பின்னணியைச் சேர்ந்தவர்கள் ஆனால் விதி எங்களை ஒன்றிணைத்தது, அதற்குப் பிக்காடிலி லைனும் தைவானீஸ் தேநீரின் மீதான அன்பும் உதவின.’

அலம்
‘லண்டனுக்குக் குடிபெயர்ந்ததால் ஒரு வித்தியாசமான உலகத்தின் வாயில் திறந்தது.
இந்துத் திருமணத்திற்குப் பேருந்தில் பயணிப்பதைப் போல, அற்புதமான, புதிய, பலதரப்பட்ட நண்பர்கள் கிடைத்தனர்.’

கெல்லி
‘சவுத் கென் ஸ்டேஷனுக்கு அருகில் இருக்கும் இந்த கிளப் அனைவரின் பாலின நோக்குநிலையையும் ஏற்றுக்கொள்கிறது.
மக்கள் தாம் விரும்பும் வகையில் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளுமளவுக்கு லண்டன் மிகவும் பரந்த இடமாகும்.’

ஷவுனா
ஒன்றாக, நாம் தான் லண்டனின் பண்பாட்டு இழைகள்.